THE COVAI MAIL
RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2018-20.



# நீரும், காற்றும் விலைக்கு விற்கும் நிலையா?

## -கே.பி.ராமசாமி, தலைவர், கே.பி.ஆர்.குழுமம்

தி கோவை மெயில்

கே.பி.ஆர். பொறியியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்டத்தின்கீழ் சுற்றுப்பகுதிகளைத் தூய்மைப்படுத்துதல், மரம் நடுதல், சுகாதாரம், ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகள் "தூய்மை இந்தியா" இயக்கத்தின் சார்பாக கருமத்தம்பட்டி நால்ரோடு அருகே சுத்தம் செய்தல், மரம் நடுதல் மற்றும் சுற்றுப்புறத்தூய்மை பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

கல்லூரித் தலைவர் கே.பி.ராமசாமி, சூலூர் எம்.எல்.ஏ. கந்தசாமி, கருமத்தம்பட்டி காவல்துறைக் கண்காணிப்பாளர் பாலமுருகன், கே.பி.ஆர். நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர் அனந்தகிருஷ்ணன், கல்லூரி முதல்வர் பொம்மண்ண ராஜா மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் அனில்குமார், என்எஸ்எஸ் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் சுமார் 300க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டனர்.

கருமத்தம்பட்டி காவல்துறைக் கண்காணிப்பாளர் பாலமுருகன் பேசுகையில், சிங்கப்பூரிலும் ஒரு காலத்தில் அதிகமான குப்பைகள் இருந்தது. பின்னர், மக்களிடமும், மாணவரிடமும் ஏற்பட்ட விழிப்புணர்வு காரணமாக தற்போது அந்நாடு சுத்தமாக உள்ளது. அதுபோல, நமது பிரதமரால் கொண்டு வரப்பட்ட "தூய்மை இந்தியா" திட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம் என்றார்.



தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மரக்கன்று நடுகிறார்கள் கே.பி.ஆர். பொறியியல் கல்லூரித் தலைவர் கே.பி.ராமசாமி மற்றும் சூலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கந்தசாமி. உடன், கருமத்தம்பட்டி காவல்துறைக் கண்காணிப்பாளர் பாலமுருகன், கே.பி.ஆர். நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர் அனந்தகிருஷ்ணன்.

கல்லூரித் தலைவர் கே.பி.ராமசாமி பேசுகையில், நீர் மாசுபட்டு சுத்தமான நீர் கிடைக்காததினால் பாட்டில்நீர் விற்பனை செய்யப்படுகிறது. இப்போது காற்றும் அதிக அளவில் மாசுபட்டுள்ளதால் சுத்தமான காற்றும் (ஆக்ஸிஜன்) விற்பனைக்கு வரத்துவங்கியுள்ளது. எனவே, நீர் மாசுபாட்டைத் தவிர்த்து, சுற்றுச்சூழலைக் காக்கவும், தூய்மையான காற்று, சுத்தமான நீர், நல்ல மழை பெறவும் நாம் சுற்றுப்புறங்களைத் தூய்மையாக வைத்துக்கொள்வதோடு அதிக அளவு மரங்களை நடுவது அவசியம். இதனை உணர்ந்துதான் கே.பி.ஆர். நிறுவனங்களின் சார்பில் இதுவரை சுமார் ஒன்றரை லட்சம் மரங்கள் கே.பி.ஆர். குழும நிறுவனங்களிலும், பொது இடங்களிலும் நடப்பட்டுள்ளன. கே.பி.ஆர். குழுமங்களின் சார்பில் தூய்மைப் பணி மற்றும் மரம் நடுதல் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அரசூர் மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் நடத்தப்படுகிறது என்றார்.